


# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper - Weekly
*Free Circulation*




VOL - 4 ISSUE - 18 Editorial : 044-42077328 / 7305837388

## வேளச்சேரியில் ஒரு பனங்காடு...




நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் நமது பகுதிகளில் பனைமரம், ஈச்சமரம், போன்ற மரங்கள் அதிக இடங்களில் காணப்பட்டது. மிகவும் அழகான கிராம சூழ்நிலையில் இருந்த வேளச்சேரி பகுதி நகரமயமானதால் அழகிய கிராம சூழ்நிலைகள் மாறிவிட்டது. தற்போது மீண்டும் வேளச்சேரி பகுதியை கிராம சூழ்நிலைக்கு கொண்டுவர வேண்டி டான்சிநகர் நலவாழ்வு சங்கத்தின் முயற்சியால் சுமார் 500 பனைமர விதைகளை விதைத்து வருகின்றோம். 08.10.2022 அன்று வேளச்சேரி மெயின்ரோடு காவல் நிலையம் எதிரில் இருந்து பிரசாந்த் மருத்துவமனை வரை அன்று 40, பனைவிதைகள் விதைக்கப்பட்டுள்ளது.




## பள்ளிக்கரணையில் வலசை பறவை வருகை அதிகரிப்பு...



சென்னை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில், அடிக்கடி பெய்து வரும் மழை காரணமாக, வழக்கத்தைவிட முன்கூட்டியே வலசை பறவைகள், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் குவிய துவங்கியுள்ளன.

சென்னை வேளச்சேரி முதல், மேடவாக்கம் வரையிலான பள்ளிக்கரணை சதுப்பு நில பகுதி, வனத்துறை பாதுகாப்பில் உள்ளது. வடக்கு ஆசியா நாடான சைபீரியா உள்ளிட்ட நாடுகளில் குளிர் காலம் துவங்கும் போது, அங்குள்ள பறவைகள் தெற்கு நோக்கி வரும்.

இதில் இந்தியாவுக்கு வரும் பெரும்பாலான பறவைகள், தமிழகத்துக்கு வருவது வழக்கம். அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடுக்கு அடுத்தபடியாக, சென்னை பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் பறவைகள் முகாமிடுவது வழக்கம்.

ஆண்டு தோறும், அக்டோபரில் வடகிழக்கு பருவ மழை காலத்தில் இங்கு வரும் பறவைகள், மார்ச், ஏப்ரல் வரை இங்கு தங்கும். இதில், கடந்த சில ஆண்டுகளாக வடகிழக்கு பருவ மழைக்கு முந்தைய மாதங்களில், இங்கு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக மழைப்பொழிவு காணப்படுகிறது.

இதுனால், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில், அனைத்து வகை பறவைகளுக்கும் ஏற்ற சூழல் நிலவுகிறது. இதுன் காரணமாக, வலசை பறவைகள் முன்கூட்டியே வரத்துவங்கி உள்ளன.

இந்நிலையில், நடப்பாண்டில் ஆகஸ்ட் மாத இறுதியிலேயே வலசை பறவைகள் வரத்துவங்கின. தற்போதைய நிலவரப்படி, உள்ளான்கள், வாத்துகள், வல்லூறுகள் என, 16 வகையைச் சேர்ந்த வலசை பறவைகள், பள்ளிக்கரணையில் முகாமிட்டுள்ளது கணக்கெடுப்பு வாயிலாக தெரிய வந்துள்ளன.

வனத்துறை ஒத்துழைப்புடன் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் பறவைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது. இஞ்கு, வடகிழக்கு பருவ மழை துவங்கிய பின், நீர்மட்டம் அதிகரிக்கும் போது தான், வலசை பறவைகள் அதிகமாக வரும். இந்தாண்டு பருவ மழைக்கு முன், அவ்வப்போது மழை பெய்வதால், மண் கொத்தி, பொரி மண் கொத்தி, பச்சை மண் கொத்தி, சேற்றுபூனை பருந்து உள்ளிட்ட பறவைகள் முகாமிட்டு உள்ளன. தற்போது, உலகின் அதிக வேகத்தில் பறக்கும் "பெரிய ராசாளி" வந்திருப்பது, அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பதாக அமைந்துள்ளது.






# CLASSIFIED

## Commercial Space for Rent

**600 Square feet for 15,000/-@ ground floor**

*31/14, Sarathy Nagar, 2nd street, Velachery ( Bethel Hr Sec School Opp )*

3 month rent as advance

**CONTACT 8015427018**

## WANTED

**Front Desk Executive**

*(Male / Female)*

**Ateliers Fitness Velachery, Behind A2b**

*Contact* **9841030772**

## TMS YOGA AND ART'S CENTER

SIMPLE SOLUTION TO LEARN

ONLINE & OFFLINE

*Contact*

**9789098094**
**8012041624**
**9500090445**

Velachery, Madippakkam, Keelkatalai.

## DESIGNING

**Tamil & English DTP designing works Rs. 750/- only**

*Contact* **7305837388**

## Commercial Space for Rent

**850 Square feet for 27,000/- @ ground floor**

*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*

2 L as advance

**CONTACT 7305837388**

---

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

## Mother Land

*Play School, Day Care & After School Care*

*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*

*Contact*

**72992 62185**
**90947 52300**

## WANTED

*Tele Callers*

**CONTACT 7305837388**

## WOMAN'S WELLNESS YOGA CENTRE

**Contact : 9444 122 922**

**TREATMENTS FOR**

- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு & குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால், ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் & தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க & அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

---


WOMAN'S WELLNESS YOGA CENTRE
Contact : 9444 122 922
TREATMENTS FOR
- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு & குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால், ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் & தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க & அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை


## CONSULTANT CATERING HOSPITALITY SERVICE

**NFC**
NIMS FOOD CONSULTANT

**E. KAMESH KUMAR** IHM-MBA

Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117

Adviser:K.VIJAYA KANCHANA
MSC Food & Nutrition.

email:Nutritionnfc@gmail.com

**Mobile:9790 902400**

email:Consultantnfc@gmail.com

## சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்

Friday Price



| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | ₹ விலை 1 லிட்டர் |
| 102.63 | 94.24 |

---

## NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY

**Online Class for Women and Kids**

*FOR ALL AGE CATEGORIES*

*CONTACT* **89391 53560**

## DESIGNING

**Tamil & English DTP designing works Rs. 500/- only**

*Contact* **7358182075**

## WANTED

**LADIES TAILOR**

**PRASUDRA** *Boutique*

No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY

*CONTACT - PREMALATHA*

**4435504719**
**8870393999**

## Commercial Space for Rent

*Velachery Main Road Opp to Chennai Silks*

**850 sq. ft. New building Fully furnished Suitable for Scan Centre, Diagnostic Lab, PolyClinic**

*Contact* **9841002876**

## COMPUTER *SERVICES*

Laptop, Peripherals through Installation, Sales, Services, Chiplevel, Virus Removal, Networking Solutions to all Hardware & Software

*Contact*

**9841823435**
**9841823436**

---

## TUITION CENTRE @ Velachery

**Baby Nagar**

*For Students Till 9th Grade of Any Syllabus*

*Contact* **909 494 7285**

## Butter Flies

Beauty Parlour & Beauty Training Institute
(Recognised by Tamilnadu Government)

**Ladies & Kids Only**
Consultant: Beauty tip & women empowerment (adviser)

**No:1, MG NAGAR, ATHANUR - 603 202**
binduinno@gmail.com

**80560 87391**
**81247 02731**

## SHARAN TRAVELS

All kinds of Tourist vehicle available here

**Drivers Available**

Contact V. Marimuthu

**9840508030**

## RENTAL

**LAND BUYING, SELLING**

All Kind of Building Repair Works Undertaken

**Contact B. Rajendran**

**90809 94500**

## SERVICES

**Plumbing works**

**Contact Govindaswamy**

**87544 09752**

ஆன்மீக தகவல்

# குடும்பத்தில் நிம்மதியும், மகிழ்ச்சியும், தடையில்லா பண வரவும் வர இதை செய்தாலே போதும்.

ஒரு குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் தன்னுடைய குடும்பத்தின் மீது அக்கறை கொண்டுள்ளவராக இருக்க வேண்டும். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முயற்சி செய்து அனுசரித்து செல்ல வேண்டும். என்னதான் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இவை வெறும் கருத்துக்கள் தான் என்பதை உணர்ந்து மனதார ஒன்றி இருக்க வேண்டும். அப்போது தான் மகிழ்ச்சியும், நிம்மதியும் பெருகும். அந்த வகையில் இந்த 3 விஷயங்களை தினமும் செய்பவர்களுக்கு மனதளவில் மகிழ்ச்சியும், நிம்மதியும், குடும்பத்தில் தடை இல்லாத பண வரவும் ஏற்படும் என்கிறது சாஸ்திரங்கள். அப்படியான எளிய சாஸ்திர குறிப்புகளை தான் இந்த பதிவின் மூலம் நாம் தெரிந்து கொள்ள இருக்கிறோம்.

முதலில் காலையில் ஆறு மணிக்கு எழுவதை வாடிக்கையாக கொள்ள வேண்டும். ஆறு மணிக்கு மேல் எழுபவர்களுக்கு தரித்திரம் பிடிக்கும் என்று கூறுவார்கள். இவர்களிடம் சோம்பேறித்தனமும், சோர்வும் எப்பொழுதும் குடி கொள்ளும். இதனால் தோல்விகள், துன்பங்கள், குடும்பத்தில் நிம்மதியின்மை போன்றவையும் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. இதனால் தான் அந்த காலத்தில் எல்லாம் எல்லோருமே சீக்கிரம் என பழகிக் கொண்டனர். 4:30 மணி முதல் 6.00 மணி வரை வீட்டை நோக்கி மகாலட்சுமி வருவதாக சாஸ்திரங்கள் கூறுகிறது எனவே அந்த நேரத்தில் எழுந்து முகம் எல்லாம் கழுவி வாசலை கூட்டி, பெருக்கி, மொழுகி, கோலம் போட்டு வைக்க வேண்டும். இப்படி கோலம் போடுபவர்கள் வெள்ளிக்கிழமையில் தாமரை கோலம் போடுவது சிறப்பு வேள்ளிக்கிழமை தோறும் காலையில் 6:00 மணிக்கு எழுந்து, வாசல் தெளித்து, தாமரை கோலத்தை அழகாக இட்டு வைத்தால், வீட்டில் நிம்மதி, மகிழ்ச்சி, செல்வம் அனைத்தும் பெருகும்.

இருண்டாவதாக அன்னதானம் என்பது நம்முடைய புண்ணியங்களை பெருக்கக் கூடிய ஒரு அற்புதமான விஷயமாக மனிதனுக்கு இறைவன் கொடையாக கொடுத்துள்ளான். நம்மை மட்டும் அல்லாமல் நம்மை சுற்றி இருப்பவர்களும் வயிறு நிரம்ப சாப்பிட்டு வறுமை இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்கிற பெருந்தன்மை நமக்குள் வளரவே தானங்கள் செய்கிறோம். இப்படியான தானத்தை நீங்கள் காலையில் உணவு உண்ணும் முன்பே எழுந்ததும் செய்ய வேண்டும். உங்களால் முடிந்தால் குளித்து முடித்துவிட்டு அருகில் இருக்கும் கோவிலுக்கு சென்று மனிதர்களுக்கு அன்னதானம் செய்யுங்கள். அப்படி முடியாமல் இருக்கும் பட்சத்தில் காலையில் எழுந்து நீங்கள் கோலம் போட்ட பிறகு சிறு குருவிகளுக்கும், பட்சிகளுக்கும் தானியங்களை தானம் செய்யுங்கள்.

அது மட்டும் அல்லாமல் விலகினங்களுக்கு உங்கள் வீட்டு அருகில் தண்ணீர் வையுங்கள். அரிசி வடிக்கும் கஞ்சி தண்ணீர், சாதம் போன்றவற்றை வீணாக்காமல் பசுக்களுக்கும், கன்றுகளுக்கும் உணவாக தானம் செய்யுங்கள். பச்சரிசியால் கோலம் போட சொல்வதும் இதனால் தான்அதிகாலையிலேயே தானம் செய்த பலன் நமக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே முன்னோர்கள் இப்படி கூறியுள்ளனர்.

மூன்றாவதாக வெள்ளிக்கிழமை தோறும் துவரம் பருப்பு கொண்டு சாம்பார் செய்ய வேண்டும். இதுவும் மகாலட்சுமி கடாட்சத்தை பெருக செய்யும். குடும்பத்தில் வறுமை நீங்க, தன தானியங்கள் பெருகும் எனவே வெள்ளிக்கிழமையில் ஏதாவது ஒரு வகையில் துவரம் பருப்பை சேர்த்து சமைத்துக் கொள்ளுங்கள். பொதுவாக எல்லோர் வீட்டிலும் சாம்பார் வைப்பது வெள்ளிக்கிழமையில் தான், அதற்கு காரணமும் இது தான் அப்படி வெள்ளிக்கிழமையில் சாம்பார் வைக்க முடியாவிட்டால், சாதத்துடன் நான்கைந்து துவரம் பருப்பை போட்டு வேக வைத்துக் கொள்ளுங்கள். அவ்வளவுதான் இப்படி இந்த மூன்று விஷயங்களையும் தொடர்ந்து கடைபிடித்து வருபவர்களுக்கு மகிழ்ச்சியும், நிம்மதியும், பண வரமும் தங்கு தடை இல்லாமல் கிடைக்க வழி கிடைக்குமாம்.

---

விவசாயம் காப்போம்

# மண் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள்

செயற்கை உரங்களை பயன்படுத்தி மண்ணை மலடாக்கியுள்ளோம். எனவே இயற்கை உரங்களை பயன்படுத்தி மண் வளத்தை மேம்படுத்தி மண்ணை பொன்னாக்குவோம் வாருங்கள்.

வாடல் நோய், வேர் அழுகல் போன்ற நோய்களின் காரணிகளான (கிளாமிடோஸ்போர், ஸ்கிளிரோசியா) மண்ணில் பல வருடங்களுக்கு தங்கி நோயை ஏற்படுத்தும் தன்மை கொண்டுள்ளன. மேல்சாம்பல் நோய், அடிச்சாம்பல் நோய் உண்டாக்கும்(கிளிஸ்டோஷீதிசியா) நோய் தாக்கப்பட்ட உதிர்ந்த இலைகளில் தங்கி மீண்டும் நோயை உண்டாக்கும்.

நன்மை பயக்கும் நுண்ணுயிர்களை உருவாக்கும் முறை:

ஊட்டமேற்றிய தொழு உரம், தழை எரு, நன்கு மட்கிய கோழி உரம், கம்போஸ்ட், மண்புழு உரம் மண்ணில் இடுதல்.

சணப்பை, கொளுஞ்சி, தக்கைப்பூண்டு, கிளைரிசிடியா முதலியவற்றை வளர்த்து பூக்கும் முன் மண்ணில் உழுதல்.

கோடை உழவு செய்வதன் மூலம் மண்ணில் மேற்பரப்பில் உள்ள கிருமிகள் சூரிய வெப்பத்தால் செயலிழக்கின்றன.

மூடாக்கு அமைத்தல்:-

மூடாக்கு அமைப்பதன் மூலம் நுண்ணுயிர்களுக்கு ஏற்ற சூழல் உருவாகிறது. மண்ணின் வெப்பநிலை அதிகமாகும் நேரங்களில் வாழையில் "ஏர்வினியா" கிழங்கு அழுகல் நோய் அதிகமாகக் காணப்படும். மூடாக்கு அமைப்பதன் மூலம் களைகளின் எண்ணிக்கை குறைகிறது. இதனால் பயிர் இல்லாத நேரங்களில் நோய் காரணிகள் களைகளில் தங்குவது கட்டுப்படுத்தப்படுகிறது.

வேப்பம்புண்ணாக்கு, கடலை புண்ணாக்கு மற்றும் புங்கம் புண்ணாக்கு மண்ணில் இடுவதால் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி வாழை வாடல் நோய், கடலை வேரழுகல் நோய் , தென்னை வாடல் நோயை பெருமளவில் கட்டுப்படுத்தலாம்.

பயிர் சுழற்சி

ஒரே பயிரைத் தொடர்ச்சியாகப் பயிரிடாமல் பயிர் சுழற்சி முறையைப் பயன்படுத்துவதால் நோய் தாக்கம் குறையும். எடுத்துக்காட்டாக முட்டைகோசில் வரும் கொண்டை அழுகல் நோய், கொடி வகைகளில் வரும் வாடல் நோய்கள், சாம்பல் நோய்கள், வேர் அழுகல் நோய்கள், கேரட், காலிபிளவர், தக்காளி, வெண்டை, கத்தரி, சோளம் மற்றும் நெல்லில் வரும் வேர்வகை நோய்களை கட்டுப்படுத்த மக்காச்சோளம் போன்ற தானியங்களை பயிர் சுழற்சி செய்து நோயைக் கட்டுப்படுத்தலாம்.

நீர் கட்டுப்பாடு

மண்ணில் அதிக நீர் தேங்கினால் தக்காளி, கத்தரி, மிளகாய், கொடிவகைகளில் ஏற்படும் நாற்றழுகல் நோய் அதிகரிக்கும். அதே போல் வெற்றிலை வாடல் நோய், மஞ்சள், இஞ்சி, கிழங்கு அழுகல் நோயை உண்டாக்கும் பித்தியம், பைடோப்தாரா போன்ற பூசணங்கள் மண்ணில் அதிக நீர் இருந்தால் அதிகப்படியாகக் காணப்படும். எனவே நீர் பாய்ச்சும் அளவு சமச்சீராக இருத்தல் வேண்டும். நீர் பாய்ச்சும் அளவு குறையும் போது மண்ணின் வெப்பநிலை அதிகமாகி, பாக்டீரியாக்கள் நோயை உண்டாக்கும் (எ.கா.) வாழை எர்வினியா கிழங்கு அழுகல் நோய்.

வாழையின் வாடல் நோயைக்கட்டுப்படுத்த வயலில் 6 மாதத்திற்கு நீரைத்தேக்கியோ அல்லது வாழைக்குப்பின் நெல் பயிரிடுவதன் மூலமோ வாடல் நோய் கிருமிகளை அழிக்கலாம்.

வயலில் நீரைத்தேக்கி வைப்பதால் நாற்றழுகல், வேர் அழுகல் நோய்கள் உருவாக்கும் பூசணங்களான பித்தியம், ரைசக்டோனியா, பைட்டோப்தாரா போன்றவற்றை நிலத்திலிருந்து அகற்றலாம்.

மூடாக்கு அமைத்தல்

நிலத்தை பாலிதீன் தாள்களைக் கொண்டு மூடுவதன் மூலம் மண்ணின் வெப்பத்தை 40° செல்சியஸ் முதல் 50° செல்சியஸ் வரை உயர்த்த முடியும். இதனால் பூசணி, தர்பூசணி, முள்ளங்கி, சாமந்தி வாடல் நோய்களை வெகுவாகக் குறைக்கலாம்.

பச்சை நீல நிற தாள்களைக் கொண்டு நிலத்தை மூடும்பொழுது வெள்ளரி மேல் சாம்பல்நோய், அடிச்சாம்பல் நோய்க்காரணிகள் அழிக்கப்படுகின்றன.

தக்காளியில் ஏற்படும் பாக்டீரியா நோயைக்கட்டுப்படுத்த பாலித்தீன் தாள்களைக்கொண்டு மண்ணை சூரியஒளி வெப்பத்திற்கு உட்படுத்தும் போதும் நோய் தாக்கப்படுவது குறைகிறது. தவிர நன்மை பயக்கும் சூடோமோனாஸ், பேசில்லஸ் போன்ற நுண்ணுயிர்கள் தாக்கப்படுவதில்லை. எனவே இவை மறைமுகமாக நோய் எதிர்ப்புத்திறனை உருவாக்குகின்றன.

மண்ணில் பிரதிபலிக்கும் மூடாக்குகளை அமைப்பதால் வைரஸ் நோய்களைப் பரப்பும் அசுவினிகளுக்கு அவை எதிர்மறையான விளைவுகளை உருவாக்குகின்றன.

மஞ்சள் நிற ஒட்டும் தன்மையுடைய தாள்களை வயலில் வைப்பதன் மூலம் தக்காளி இலைசுருள் நோய், வெள்ளரி தேமல் நோய், உருளைக்கிழங்கு நச்சுயிரி நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

வெள்ளை நிறத்தில் உள்ள பாலித்தீன் மூடாக்குகள் தக்காளி, வெள்ளரி, தர்பூசணி, மிளகாய் வயல்களில் அமைத்தால் நச்சுயிரி நோய்கள் குறைக்கப்படுகின்றன.

வெள்ளரி மஞ்சள் தேமல் நோயைக்கட்டுப்படுத்த, நெல் வைக்கோலை மூடாக்காக பயன்படுத்தும் பொழுது வெள்ளை ஈக்கள் கவரப்பட்டு அதிக வெப்பத்தால் அழிக்கப்படுகிறது.

நன்கு மக்கிய தொழு உரத்துடன் டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் ப்ளூரசன்ஸ் அல்லது பேசில்லஸ் போன்ற நன்மை பயக்கும் எதிர் உயிரிகளை ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் மண்ணில் இடுவதால் சிறந்த நோய் மேலாண்மை கிடைக்கிறது.

# YOUNG ACHIEVER AWARD



This week VIGNESH ARUNKUMAR received Young Achiever Award from our Express Velachery Team.

Vignesh is a Six year old boy studying Grade 1 in VIBGYOR High School, HSR layout, Bengaluru.

Mr.Arunkumar and Mrs. Lavanya were proud parents of Vignesh Arunkumar who born on June 2, 2016 in Bangalore. Naturally, he is a child with good grasping ability.

At the tender age of 3 itself, he was able to recite about 60 small Sanskrit slokas. At the age of 4 and half, he has been awarded world record from India Book of Records and Raaba book of Records for identifying logos of 385 automobile brands. Also, he has been recognized for doing maximum number of maze puzzles of about 25 within least time.





He has won Master of talents, Multi Talents award Season 4 and Star performer in International Talen Hunt Season 5 from Raaba book of Records in the year 2021. He has also been recognised as Talent Icon of the year 2021 from Raaba book of Records.

Vignesh Arunkumar is interested in reading story books, reciting rhymes and slokas. He has also won many other awards like Amazing Kid award for Multiple talents, Enchanting kids Super talented award & unique talent award, Smart kid - best talented award 2021 for rhymes recitation, Genius kid award for singing from Smart kid, awards for singing, sloga & story telling from Wonder buddies, Super Reader contest, Super memory power kid contest from Smart kid.

He has been awarded APJ Abdul Kalam Excellence Achiever Award from Sindu Social Service Trust embracing all his achievements.



Recently, Vignesh Arunkumar has enrolled in RIC academy for abacus classes in the month of January 2022. With the help of tremendous support rendered by his abacus mentor, Mrs.Karthika, he was able to do 100 two digits (3rows) direct addition and subtraction sums using Abacus mind math technique within a short span of 2 minutes and 50 seconds.

He is also recognised by Raaba book of Records for the same in the month of April 2022. Also, he is also awarded a world record for answering 75 direct problems (4 rows) while parellely doing coloring from Raaba book of records in the month of April 2022.








I am interested in being an aeronautical engineer. I am always thankful to my parents for giving me such a wonderful life, their support and love which filling up my world with love for this success.

***"We are proud to present this award to this Little Champ. Good luck to you for your future and your ambitions. We were happy a lot for this achievements... Congratulations!"***

ANANDAM LEARNING ACADEMY
www.ampp.in
CLASSES for 2nd to 12th
by experienced Teachers
○ PHYSICS ○ CHEMISTRY
○ MATHEMATICS
○ BIOLOGY ○ SOCIAL STUDIES
○ SPELLING BEE
○ SPOKEN ENGLISH ○ SPOKEN HINDI
○ TAMIL / BASIC TAMIL
○ KEYBOARD
Contact: 99520 62573 / 96778 07469
ADDRESS
37F, VELACHERY - TAMBARAM ROAD
VIJAYANAGAR, VELACHERY - 42
(NEAR ADYAR ANANDA BHAVAN)

## சென்னையில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட கேபிள், இன்டர்நெட் வயர்கள் அகற்ற நடவடிக்கை...



பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உபயோகமில்லாத கேபிள்கள், பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையுறாக உள்ள கேபிள் டி.வி., இன்டர்நெட் வயர்களை அகற்றி முறைப்படுத்தவும், மேலும், அனுமதியின்றி சட்டத்திற்கு புறம்பாக அமைக்கப்பட்டுள்ள கேபிள்களை அகற்றவும் மின்துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, இதுவரை 165.87 கி.மீ. நீள கேபிள் டிவி மற்றும் இன்டர்நெட் வயர்கள் மாநகராட்சி பணியாளர்களால் அகற்றப்பட்டுள்ளது. வார்டுகளில் மாநகராட்சி பணியாளர்கள் கேபிள் வயர்களை அகற்றுதல் மற்றும் முறைப்படுத்துதல் பணிகளை மேற்கொள்வதற்கு முன்னதாக, சேவை நிறுவனங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தாமாக முன்வந்து வயர்களை அகற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தாமாக முன்வந்து கேபிள் வயர்களை அகற்றாதபட்சத்தில் மாநகராட்சியின் சார்பில் அகற்றப்பட்டு வருகிறது. எனவே, மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கேபிள் டி.வி. மற்றும் இன்டர்நெட் நிறுவனங்கள் உபயோகமில்லாத கேபிள்கள், பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள வயர்களை அகற்றவும், முறைப்படுத்தப்படாத வயர்களை முறைப்படுத்தி சீர்செய்யவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# Chutties Corner

## தனித்திறமை பகுதி







*Joshua Daniel*
Class 5
St. Theresa Bacq
Public School,
Bangalore.






*DR.A.SANJAY*
GRADE 3 B
CAPSTONE HIGH SCHOOL
BANGALORE, KARNATAKA.

உங்கள் வீட்டு குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்த, அவர்களின் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை அவர்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

## What does it mean?




- **Piece of cake: something very easy**
  **The exam was a piece of cake.**

- **Pig out: to eat a lot or too much**
  **We pigged out on all the delicious cakes and pastries.**

- **Eat humble pie: to admit that one was wrong**
  **The lawyer had to eat humble pie in the court because the facts he presented were wrong.**



Dr.Mrs. Y. Deepika,
M.Sc.,Ph.D.,
Delhi Public School,
Nacharam,Telangana, India.

## பழமொழி

உப்பும் அறிவுரையும் கேளாமல் தராதே. .

**Give neither advice nor salt till you are asked for it.**

## படத்தில் உள்ள 5 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!





*Find 5 Differences ?*

## PAPER CRAFT



# இந்த வார ராசிபலன்



**மேஷம்**
உங்கள் குடும்பத்தில் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். வெளிவட்டார பழக்கத்தை குறைத்துக் கொள்வது நல்லது. எந்த காரியத்திலும் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.



**துலாம்**
இந்த வாரம் திட்டமிட்ட காரியம் காலதாமதின்றி நிறைவேறும். வீடு, மனை, வாகன வகைகளில் சற்று கவனமாக இருக்கவும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும்.



**ரிஷபம்**
குடும்பத்தில இருந்த குழப்பங்கள் நீங்கி காணப்படும். நீங்கள் காட்டி வந்த கடுமையான போக்கு மாறி உங்கள் செயலில் கனிவான தன்மை நிறைந்து இருக்கும்.



**விருச்சிகம்**
இந்த வாரம் குடும்பத்தில் இருந்த பழைய சிக்கல்கள் நீங்கும். வரும் எதிர்ப்புகளை எதிர்கொண்டு ஜெயிக்க முடியும்.



**மிதுனம்**
இந்த வாரம் உங்கள் பொருட்களை கவனமாக பாதுகாத்துக் கொள்வது நல்லது. பொருளாதாரத்தில் உயர்வு நிலை உண்டாகும்.



**தனுசு**
இந்த வாரம் உறவினர்கள் வகையில் சில அலைச்சல் இருக்கும். குடும்பத்தில் சுபிட்சம் உண்டாகும்.புதிய முயற்சிகள் யாவும் வெற்றிபெறும்.



**கடகம்**
இந்த வாரம் பெண்களுக்கு எந்த ஒரு வேலையில் ஈடுபட்டாலும் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. பயணங்களால் நிறைய அலைச்சல் இருக்கும்.



**மகரம்**
நீண்ட நாட்களாக தடைபட்ட விஷயங்கள் இந்த மாத சாதகமாக முடியும். பயண அலைச்சல்கள் அதிகம் இருந்தாலும் அதற்கேற்ற அனுகூலமான பலன்களும் உண்டு.



**சிம்மம்**
இந்த வாரம் எந்த சூழ்நிலையையும் சமாளிக்கும் தைரியம் உண்டாகும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். மனவருத்தம் நீங்கும்.



**கும்பம்**
இந்த வாரம் பிரியமானவர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை ஏற்படும். உங்களை சுற்றி இருப்பவர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது.



**கன்னி**
இந்த வாரம் ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு உண்டாகும். பிரியமானவர்கள் ஒத்தாசையாக இருப்பர். நண்பர்கள் தேடி வந்து உதவி செய்வர்.



**மீனம்**
இந்த வாரம் உறவினர்களின் வருகையால் செலவுகள் கூடினாலும் மனமகிழ்ச்சி காண முடியும். புதிய வண்டி, வாகன சேர்க்கை உண்டு.



பெருங்குடி MRTS சாலை சிலமாதங்களுக்கும் முன் போக்குவரத்து பயண்பாட்டிற்க்கு திறந்து விடப்பட்டது. மேற்கண்ட சாலையில் சென்னை மாநகராட்சி சார்பாக தெருவிளக்கு கடந்த மூன்று மாதங்களுக்கு முன் அமைக்கப்பட்டது. அனைத்து பணிகளும் முடிவடைந்த நிலையில் இன்னும் மின்விக்கு எரியாமல் உள்ளன. மழைக்காலம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இரவு நேரங்களில் அந்த சாலை மிகவும் இருட்டாக இருக்கும். இருச்சக்கர, வாகன ஓட்டிகளும், பொதுமக்களும் இதனால் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகுவார்கள் விபத்துகள் ஏற்படும் சூல்நிலை உள்ளது. வாகன ஓட்டிகளும் அச்சத்துடனே வாகனத்தை ஓட்டநேரிடும் ஆகவே MRTS பெருங்குடி சாலையில் இருக்கின்ற தெருமின்விளக்கை விரைவில் பயண்பாட்டிற்கு கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ம.பாலகிருஷ்ணன்
போதுசெயலாளர்
டான்சிநகர் நலவாழ்வுசங்கம்.

**பொன்மொழி:-**

**கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே, அது உன்னை கொன்றுவிடும். கண்ணை திறந்து பார், நீ அதை வென்று விடலாம்.**

-அப்துல் கலாம்

## முகப்பரு, கரும்புள்ளி, தழும்புகள் நீங்க...

❖ வாழைப்பழத்தை மசித்து பால் கலந்து முகத்தில் பூசி, சில நிமிடங்கள் கழித்து தண்ணீரால் கழுவினால், முகம் பொலிவுடன் காணப்படும்.

❖ பாதாம் பருப்பு, தேன் மற்றும் தயிர் ஆகியவற்றை சம அளவு எடுத்து முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால்,முகத்தின் பொலிவு அதிகரிக்கும்.

❖ தேன் மற்றும் பால் கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவினாலும், முகம் பொலிவுடன் காணப்படும்.

❖ கோதுமை தவிடுடன் பால் கலந்து கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தடவி வர சிறிது நாட்களில் கரும்புள்ளிகள் மறைந்து விடும்.

❖ தேன் மூன்று டேபிள் ஸ்பூன் எடுத்துக் கொண்டு அத்துடன், ஒரு டீஸ்பூன் லவங்கப்பட்டை தூள் கலந்து கரும்புள்ளிகள்உள்ள இடத்தில் தேய்த்து, சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரால் கழுவினால் கரும்புள்ளிகள் மறையும்.

❖ முருங்கை இலைச்சாறு, எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலந்து தடவினால், கரும்புள்ளிகள் நீங்கும். அதே போல் பப்பாளி பழத்தை மசித்து தேன் கலந்து முகத்தில் தடவினாலும், நல்ல பலன் கிடைக்கும்.

## திருக்குறள்

[34]

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற.

In spotless mind virtue is found
And not in show and swelling sound.

# YOGASANAM

## சுப்த பாதாங்குஸ்தாசனம்

**பயன்கள்:-**



- முதுகுத் தசைகளை உறுதியாக்குகிறது
- அடி முதுகு வலியைப் போக்க உதவுகிறது
- தோள் மற்றும் கைகளைப் பலப்படுத்துகிறது
- இடுப்பின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கிறது
- வயிற்று உள்ளுறுப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்துகிறது
- முலச்சிக்கலைப் போக்குகிறது
- கால்களின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிப்பதுடன் கால்களை நீட்சியடையச் செய்கிறது
- கால் தசைகளை பலப்படுத்துகிறது
- முட்டி வலியைப் போக்குவதுடன் கால் மூட்டுகளைப் பலப்படுத்துகிறது
- சையாடிக் வலியைப் போக்க உதவுகிறது
- குழந்தையின்மை குறைப்பாட்டைப் போக்க உதவுகிறது



அருட்பெருஞ்ஜோதி தனிபெருங்கருணை
YOGA CENTRE
Cell : 9444 122 922

# Entertainment Corner

### அறுசுவை சமையல்

## தினை தேங்காய் பிஸ்கட்


**தேவையான பொருட்கள்:**

- 1/2 கப் + 1 டேபிள் ஸ்பூன் தினை மாவு
- 1/2 கப் + 1 டேபிள்ஸ்பூன் கோதுமை மாவு
- 1/4 கப் + 1/4 கப் தேசிக்கேட்டர் கோக்கனட்
- 1/2 கப் பொடித்த வெல்லம் (அ) நாட்டுச்சர்க்கரை
- சிறிதுஏலங்காய்தூள்
- 2 டேபிள்ஸ்பூன் முட்டை (அ) பால்
- 2 டீஸ்பூன் வெண்ணெய்

**செய்முறை:**

- தினையை ஐந்து முறை நன்றாகக் கழுவி ஒரு மணி நேரம் ஊறவைக்கவும் பிறகு தண்ணீரை முழுவதும் வடித்து துணியில் படர்ந்து காய வைக்கவும்
- ஈரம் முழுவதும் போன பிறகு மிக்ஸியில் பொடியாக அரைத்து சலித்து காற்றுப் புகாத டப்பாவில் வைக்கவும் தேவைப்படும் பொழுது
- ஒரு பவுலில் மிருதுவான வெண்ணையை சேர்த்து நன்றாக 2 நிமிடம் கிளறவும் பிறகு வெல்லத்தை பொடி அல்லது மிக்ஸியில் ஒரு முறை அரைத்து இதில் சேர்க்கவும் இப்போது வெள்ளமும் வெண்ணையும் இரண்டும் ஒன்றோடு ஒன்று கலக்குமாறு 3 நிமிடம் கிளறவும்
- பிறகு இதில் முட்டையை அல்லது பால் சேர்த்து அனைத்தையும் ஒன்றோடு ஒன்று கலக்கவும் பிறகு இதில் தினை மாவு, கோதுமை மாவு சேர்க்கவும்
- தேசிக்கேட்டர் கோக்கனட் சேர்த்து அனைத்தையும் கலந்து சப்பாத்தி மாவு பதத்தில் மிருதுவாக பிசையவும் இவை சற்று தளர்வாக அல்லது தண்ணீர் போலவும் இருப்பதாக தோன்றினால் இதனுடன் ஒரு டேபிள்ஸ்பூன் தினைமாவு அதே அளவு கோதுமை மாவு சேர்த்துப் பிசையவும் படத்தில் காட்டியவாறு மாவு மிருதுவாகவும் கெட்டியாகவும் இருக்க வேண்டும்
- உருண்டையை எடுத்து உருட்டி தட்டையாக தட்டிக் கொள்ளவும் பிறகு இதனை தேசிக்கேட்டர் கோக்கனட் பிரட்டி எடுத்துக்கொள்ளவும்
- அகலமான பாத்திரத்தில் உப்பு அல்லது மணல் சேர்த்து 15 நிமிடம் பிரீ ஹிட் செய்யவும்... ஒரு தட்டின் மேல் பட்டர் சீட்டு வைத்து தயாரித்து வைத்திருக்கும் பிஸ்கட்டை சற்று இடைவெளி விட்டு வைக்கவும் பிறகு இதனை 15-20 நிமிடம் மிதமான தீயில் வைக்கவும்
- இதே போல் அனைத்தையும் தயாரித்து கொள்ளவும். சுவையான ஆரோக்கியமான தினை தேங்காய் பிஸ்கட் தயார்.

## சொல் விளையாட்டு





கட்டத்தில் உள்ள ம் எழுத்தில் முடியும் மூன்றெழுத்துச் வார்த்தைகள் 4 கண்டுபிடியுங்கள்.

## சுடோக்கு விளையாட்டு

கட்டத்தில் உள்ள எண்களுக்கு ஏற்ப சரியான விடையை கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | 4 | 9 | 1 | 6 | | 5 |
| 2 | | | | 6 | | 3 | | 9 |
| | | | | | 7 | | 1 | |
| | 5 | 8 | 6 | | | | | 4 |
| | | 3 | | | | | 9 | |
| | | 6 | 2 | | | 1 | 8 | 7 |
| 9 | | 4 | | 7 | | | | 2 |
| 6 | 7 | | 8 | 3 | | | | |
| 8 | 1 | | | 4 | 5 | | | |

## சொல் புதிர் விளையாட்டு




சூரியனை இப்படியும் கூறலாம்

ஒரு வேதித் தனிமம் Hg


Publisher : R. Rajesh
Editor : Saranya Rajesh
Designer : D. Deepa
Journalist : P. Praveen
Marketing Executive : C. Karthikeyan

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com



**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.


உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

## விடுகதை விளையாட்டு

1.தாய் குப்பையிலே மகள் சந்தையிலே -அவை என்ன?

2.கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்க முடியாது -அது என்ன?

3.குண்டுச்சட்டியில குதிரை ஓட்டறான் -அது என்ன?

4. ஓடையில கருப்பு மீனு துள்ளி விளையாடுது -அது என்ன?

5.கை இருந்தும் விரல் இல்லாதவன், கழுத்து இருந்தும் தலை இல்லாதவன்,உடல் இருந்தும் உயிர் இல்லாதவன் -அவன் யார்?

6.லட்சம் பேர் கொண்ட படை திரண்டாலும் ஒரு தூசு, புழுதி கிளம்பாது -அவர்கள் யார்?

7.படபடக்கும்,பளபளக்கும் மனதுக்குள் இடம் பிடிக்கும் -அது என்ன?

8.உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு -அது என்ன?

9.கொம்பு நிறைய கம்பு -அது என்ன ?

10.முதுகிலே சுமை தூக்கி முனகாமல் அசைந்து வரும் -அது என்ன?

11.சின்ன மீசைக்காரன் மியாவ் ஓசைக்காரன் -அவன் யார்?

12.பட்டுப்பை நிறைய பவுன் காசுகள். -இது என்ன?

### சென்ற வார விடுகதை விளையாட்டு விடைகள்

1.கைகாட்டி 2.பச்சை குத்துதல் 3.ஒட்டகம் 4.பப்பாளி விதைகள் 5.ஆரஞ்சு 6.குடை 7.கடிகாரம் 8.கொசு 9.இதயம்

### சென்ற வார சொல் புதிர் விடைகள்

1.மின்விசிறி
2.அறிவியல்

### சென்ற வார சொல் விளையாட்டு விடைகள்

1.குளம் 2.வானம் 3.மேளம் 4.குலம்

### சென்ற வார சுடோக்கு விளையாட்டு விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 4 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 |
| 6 | 7 | 2 | 1 | 9 | 5 | 3 | 4 | 8 |
| 1 | 9 | 8 | 3 | 4 | 2 | 5 | 6 | 7 |
| 8 | 5 | 9 | 7 | 6 | 1 | 4 | 2 | 3 |
| 4 | 2 | 6 | 8 | 5 | 3 | 7 | 9 | 1 |
| 7 | 1 | 3 | 9 | 2 | 4 | 8 | 5 | 6 |
| 9 | 6 | 1 | 5 | 3 | 7 | 2 | 8 | 4 |
| 2 | 8 | 7 | 4 | 1 | 9 | 6 | 3 | 5 |
| 3 | 4 | 5 | 2 | 8 | 6 | 1 | 7 | 9 |


TNBIL04133 R.Dis.No.1845/2014


# கலைமானும் குதிரையும்

## திருக்குறள் கதை

ஒரு காட்டுல ஒரு குதிரையும் கலைமானும் ஒரு நாள் சண்ட போட்டுச்சுங்க

அதனால கோபமான அந்த காட்டு குதிரை அந்த காட்டுக்குள்ள இருக்குற வேட்டைக்காரன் கிட்ட போச்சு



எனக்கு ஒரு கலைமான் இருக்குற இடம் தெரியும் அந்த இடத்துக்கு நான் உங்கள கூட்டிட்டு போறேன் அந்த மான நீங்க வேண்ட்டையாடணும்னு சொல்லுச்சு அந்த குதிரை





குதிரையோட பேச்ச கேட்ட அந்த வேட்டைக்காரன், எனக்கு சம்மதம் ஆனா எனக்கு காட்டுக்குள்ள நடக்க முடியாது , உன் முதுகுல சவாரி செய்ய இந்த கடிவாளத்தை உன்மேல போட்டுக்குறேன்னு சொன்னான் அந்த வேட்டைக்காரன்

எப்படியாவது அந்த காலமான பிடிக்கணும்னு நினச்சா அந்த குதிரை அதுக்கு ஒத்துகிடுச்சு



உடனே தன்னோட கடிவாளத்தை எடுத்து அந்த குதிரை மேல போட்டு ,அதுமேல உக்காந்து காட்டுக்குள்ள போனான் அந்த வேட்டைக்காரன்



அந்த குதிரை சொன்ன இடத்துல இருந்த மான வலை வீசி பிடிச்சான் அந்த வேட்டைக்காரன் ,உடனே என்ன விடுதலை பண்ணுங்க என்னோட கடிவாளத்தை கழட்டுங்கனு சொல்லுச்சு அந்த குதிரை

ஆனா அதுக்கு அந்த வேட்டைக்காரன் , எனக்கு உதவி செஞ்சாலும் ஒரு மானுக்கு நீ துரோகம் செஞ்சிருக்க அதுக்கு தண்டனையா எனக்கு எப்பவும் சவாரி செய்ய நீ என்னோட அடிமையாவே இருன்னு சொன்னான் அந்த வேட்டைக்காரன்

அப்பதான் அந்த குதிரைக்கு ஒரு திருக்குறள் ஞாபகத்துக்கு வந்துச்சு

**"தன்னுயிர்கது ஏன்னாமை தானறிவான் என்கொலோ**
**மன்னுயிர்க்கு இன்னா செயல்"**

அடுத்தவர் செய்த தீமை தனக்குத் துன்பமானதை அனுபவித்து அறிந்தவன், அடுத்த உயிர்களுக்குத் தீமை செய்ய எண்ணுவது என்ன காரணத்தால்?

அப்படிங்கிற விளக்கம் அந்த குதிரைக்கு நல்லா புரிச்சிச்சு



### சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கம் விலை - | 22 கேரட் | | 24 கேரட் | |
| | 1 கிராம் | 4735 | 1 கிராம் | 5137 |
| | 8 கிராம் | 37880 | 8 கிராம் | 41096 |
| வெள்ளி விலை - | 1 கிராம் | 62.30 | | |
| | 1 கிலோ | 62300 | | |







Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH